# தமிழ் இலக்கணம்

## இலக்கணம் :

இலக்கணம் என்பது சொற்கள் மற்றும் சொற்றொடர்களைக் கொண்டு அர்த்தமுள்ள தன்னிறைவான வாக்கியங்களை அமைத்தலும், சொற்கள் மற்றும் சொற்றொடர்களுக்கு இடையேயான தொடர்பினைக் குறிப்பதே ஆகும்.

## தமிழ் இலக்கணம் :

தமிழ் மொழி இலக்கியத்திற்கும், இலக்கணத்திற்கும் உள்ள தொடர்பை அறியவும், தமிழ் இலக்கணப் பிரிவுகளை அறியவும் உதவுவதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

## தமிழ் மொழி இலக்கண வகைகள் :

தமிழ் இலக்கணம் ஐந்து வகைப்படும். அவை :-

1. எழுத்திலக்கணம்.
2. சொல்லிலக்கணம்.
3. பொருளிலக்கணம்.
4. யாப்பிலக்கணம்.
5. அணியிலக்கணம்.

**எழுத்து இலக்கணம்** :

எழுத்தின் வகைகளை வரையறுப்பது எழுத்து இலக்கணம் ஆகும்.

**சொல் இலக்கணம்** :

சொற்கள் எழுத்தில் இருந்து உருவாவதைப் பற்றி விளக்குவதே சொல் இலக்கணம் ஆகும்.

**பொருள் இலக்கணம்** :

அகப்பொருள், புறப்பொருள் என இரண்டாக பகுப்பதே பொருள் இலக்கணம் ஆகும்.

**யாப்பு இலக்கணம்** :

செய்யுள் வகையினைக் கொண்டு திகழ்வதே யாப்பு இலக்கணம் ஆகும்.

**அணி இலக்கணம்** :

செய்யுளில் அமைந்திருக்கும் சொல்லழகு, பொருளழகு முதலியவற்றை வரையறுப்பது அணி இலக்கணம் ஆகும்.

www.kids.noolagam.com